# உங்கள் பிள்ளையுடன் வாசித்தல் மற்றும் எழுதுதல்

## பாலர் வகுப்பு முதல் தரம் 6 வரை

பெற்றோருக்கான ஒரு வழிகாட்டி

TAMIL

reach every student

Ontario

***Reading and Writing with Your Child, Kindergarten to Grade 6*** *(உங்கள் பிள்ளையுடன் வாசித்தல் மற்றும் எழுதுதல், பாலர் வகுப்பு முதல் தரம் 6)* ஆனது **Ontario** (ஒன்ராறியோ) **Ministry of Education** (கல்வி அமைச்சு) இன் ***Helping Your Child with Reading and Writing: A Guide for Parents*** *(வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் உங்கள் பிள்ளைக்கு உதவுதல்: பெற்றோருக்கான ஒரு வழிகாட்டி)* இன் புதுப்பிக்கப்பட்ட வடிவமாகும்.

**Parent Engagement Office** (பெற்றோர் ஈடுபாட்டு அலுவலகம்) இன் கூட்டாண்மையுடன் **Literacy and Numeracy Secretariat** (எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுச் செயலகம்) இனால் இந்நூல் தயாரிக்கப்பட்டது.

இப்பதிப்பில் புதியது: **TVOkids.com** இல் அணுகக்கூடிய இணைய விளையாட்டுகள் மற்றும் செயற்பாடுகளுக்கான இணைப்புகள்.

# உள்ளடக்கம்

பெற்றோருக்கு ஒரு குறிப்பு .......... 2

எனது பிள்ளையின் கற்றலை நான் ஆதரிப்பது எவ்வாறு? .......... 3

வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள் .......... 4

- உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் ஆரம்பிக்க முன்னர் .......... 5
- உங்கள் பிள்ளை முதன்முதலாக வாசிக்கவும் எழுதவும் கற்கும்பொழுது .......... 6
- உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் கற்கும்பொழுது .......... 7
- உங்கள் பிள்ளை கூடியளவு சரளமான வாசகராகவும் தெளிவான எழுத்தாளராகவும் ஆகும்பொழுது .......... 8
- உங்கள் பிள்ளை ஒரு வாசகராகவும் எழுத்தாளராகவும் வளர்ச்சியடையத் தொடரும்பொழுது .......... 9

பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள் .......... 10

- உங்கள் பிள்ளையுடன் உரையாடுங்கள் .......... 10
- புரிந்துகொள்வதற்கான பழக்கங்களை கட்டமையுங்கள .......... 12
- ஒவ்வொரு நாளும் வாசியுங்கள் .......... 14
- அதை சுவாரசியமானதாக்குங்கள், அதை முக்கியமானதாக்குங்கள் .......... 16

உங்கள் பிள்ளையிடமிருந்து மிகச் சிறந்ததை எதிர்பாருங்கள் .......... 18

இணைய வளங்கள் .......... 19

> தம் பிள்ளைகளின் கற்றல் மற்றும் கல்விசார் முன்னேற்றத்திற்கு எவ்வளவிற்கு குடும்பங்கள் அதிகளவு ஆதரவு வழங்குகின்றார்களோ, அப்பிள்ளைகள் பாடசாலையில் நன்கு செயற்பட்டு அவர்களின் கற்றலை மேலும் தொடர்வார்கள் என்பதற்கு அதிகளவு சாத்தியக்கூறுகள் உள்ளன.
>
> **Karen Mapp and Anne Henderson, 2002**
>
> *A New Wave of Evidence: The Impact of School, Family, and Community Connections on Student Achievement*

# பெற்றோருக்கு ஒரு குறிப்பு

## நீங்களே உங்கள் பிள்ளையின் முதல் ஆசிரியராவீர்கள்.

உங்கள் ஆதரவுடன், உங்கள் பிள்ளை பலமான எழுதுதற் திறன்களைக் கொண்டவொரு மிகச்சிறந்த வாசகராகுவார் - அவர் ஒரு நாள், கல்லூரி, பல்கலைக்கழகம் அல்லது வேலைத்தளத்தினுள் நுழையும்பொழுது, இது எத்தகையதொரு மாற்றத்தை ஏற்படுத்தும்! உங்கள் பிள்ளைக்கு வாசிக்கவும் எழுதவும் கற்க உதவுவதற்கு உங்களுக்கு பல விசேட திறன்கள் அவசியமல்ல. அன்றாடச் செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் உங்கள் பிள்ளையுடன் நேரத்தை செலவு செய்வதே பேரளவு மாற்றங்களை ஏற்படுத்தும்.

உங்கள் பிள்ளை தற்பொழுது ஆரம்பிக்கின்றாரோ, ஏற்கனவே வாசிக்கவும் எழுதவும் அறிந்திருக்கின்றாரோ, மேலதிக கற்றலுக்கு எப்பொழுதும் இடமிருக்கின்றது. உங்கள் பிள்ளைக்கு வயது கூடும்பொழுது, அவர் புதிய வாய்ப்புகளையும் புதிய வெற்றிகளையும் அனுபவித்து மகிழ்வார்; ஒரு ஆரம்ப ஆசிரியர் - நீங்கள் - உரையாடியும், விளையாடியும், உற்றுக்கேட்டும், இல்லத்தில் நேரத்தைச் செலவுசெய்ததே இதற்கான காரணமாகும். உங்கள் பிள்ளை பாடசாலையிற் கற்பதை இவை அனைத்தும் வலியுறுத்துகின்றன.

உங்கள் பிள்ளைக்கு ஆதரவளிப்பதற்கு, உங்களுக்கு உதவுமுகமாக நாம் இவ்வழிகாட்டியை உருவாக்கியுள்ளோம். எல்லா உத்திகளும் Ontario (ஒன்ராறியோ) பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டதுடன், உங்கள் பிள்ளை பாடசாலையில் கற்பவற்றுடன் தொடர்புகொண்டுள்ளன.

வாழ்க்கைப்பூராக பெறக்கூடிய வெற்றிகள், பலமான வாசித்தல் மற்றும் எழுதுதற் திறன்களுடன் ஆரம்பிக்கின்றன என்பதை ஞாபகத்திற்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளையின் வாழ்க்கைப்பூரான வெற்றி உங்களுடனேயே ஆரம்பிக்கின்றது என்பதே இதற்கு அர்த்தமாகும்.

ஒன்றுசேர்ந்து கற்பதன் மூலம் மகிழ்வுபெறுங்கள்!

தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்: இவ் வழிகாட்டியில், *பெற்றார்* என்ற சொல், பெற்றோர், பாதுகாவலர்கள், பராமரிப்பாளர்கள், மற்றும் பிள்ளைகளுக்கு கணிதத்தைக் கற்க உதவிசெய்யும் பிற குடும்ப அங்கத்தவர்கள் ஆகியோரைக் குறிப்பிடுகின்றது.

# எனது பிள்ளையின் கற்றலை நான் ஆதரிப்பது எவ்வாறு?

## வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வது பாடசாலை *மற்றும்* இல்லத்தில் நடைபெறுகின்றது.

இல்லத்தில் வாசித்தல் மற்றும் எழுதுதலுடன் உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஆதரவளிப்பதற்கு உதவும் நடைமுறைக்குரிய தகவல்களை இவ்வழிகாட்டி கொண்டுள்ளது. உங்கள் பிள்ளையுடன் நீங்கள் செய்யக்கூடிய இலகுவான, மகிழ்வூட்டும் செயற்பாடுகளை எடுத்துக்கூறுகின்றது; உணவு விவரக்குறிப்புகளை வாசித்தல் மற்றும் மளிகைப்பொருட்களை பட்டியலிடுதல், விளையாட்டுப் பயிற்சியிற்கு செல்லும் வழியில் ஒன்றாக உரையாடுதல், மற்றும் முழு குடும்பத்துடனும் ஒரு திரைப்படத்தைப் பற்றி கலந்துரையாடுதல் போன்றவற்றை இது உள்ளடக்குகின்றது. இப்பகிரப்பட்ட அனுபவங்கள் யாவும் உங்கள் பிள்ளையின் எழுத்தறிவுத் திறன்களை விருத்திசெய்ய உதவும்.

வீட்டு-பாடசாலை இணைப்பும் உங்கள் பிள்ளையின் வெற்றியிற்கு முக்கியமானதாகும். ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் ஒத்துழைப்பதைப் பிள்ளைகள் கவனிக்கும்பொழுது, அவர்கள் பாடசாலையைப் பற்றி கூடியளவு பாதுகாப்பையும் நம்பிக்கையையும் உணர்வார்கள். உங்கள் பிள்ளையின் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கும், அவரின் கற்றலை எவ்வாறு நீங்கள் ஆதரிக்கலாம் என்பதையும் அறிவதற்கு, உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் பேசுங்கள்.

வளரும்பொழுது எல்லா பிள்ளைகளும் உடல்ரீதியாக, அறிவுத்திறன்ரீதியாக, உணர்வுரீதியாக, மற்றும் சமூகரீதியாக மாறுகின்றனர். ஆயினும், ஒவ்வொரு பிள்ளையும் தனிச்சிறப்புடைய ஆற்றல்கள், தேவைகள், மற்றும் அனுபவங்களை கற்றலிற்கு கொண்டுவருகின்றனர். உங்கள் பிள்ளையின் தனிச்சிறப்பான சொந்த மற்றும் கலாச்சார அடையாளத்தை ஏற்றுக்கொள்வதாலும் - மற்றும் வலியுறுத்துவதாலும் - உங்கள் பிள்ளையை ஒரு வாசகராகவும் எழுத்தாளராகவும் வளம்பட வழிவகுப்பீர்கள்.

இறுதியாக, வாசிக்கவும் எழுதவும் கற்பது அனைத்தும் ஒரே நேரத்தில் இடம்பெறுவதில்லை என்பதை ஞாபகங்கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் வெவ்வேறான வேகங்களிலேயே கற்கின்றனர். அதற்கு நேரம், பயிற்சி, மற்றும் ஆதரவு ஆகியவையே அவசியமாகும். உங்களுக்கு எப்பொழுது, எங்கு இயலுமானதோ, உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளித்து அவரின் ஆற்றல்களில் உங்களுக்கு நம்பிக்கையிருக்கின்றது என்பதைக் காண்பியுங்கள்.



## வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள்

வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் பழகுவதற்கு பிள்ளைகளுக்கு மிகவுகந்த காலம் அவர்கள் மிக இளமையாக உள்ளபொழுதாகும். நேர்மறையான மனப்பான்மைகளையும் அடிப்படைத் திறன்களையும் பிள்ளைகள் இக்காலத்திலேயே விருத்திசெய்ய ஆரம்பிக்கின்றனர். பிள்ளைகளுக்கு வாசிப்பதும், அவர்களின் எண்ணங்களைப் பற்றி (அவ்வெண்ணங்கள் உங்களுக்கு உடனடியாக அர்த்தமளிக்காவிட்டாலும்) உரையாடுவதும், பிள்ளைகளுக்கு ஆழங்கூடிய புரிந்துணர்வை அடைவதற்கு உதவுகின்றது. ஆங்கிலத்தைத் தவிர வேறொரு மொழி உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் கூடியளவு வசதியாகவிருந்தால், தயவுசெய்து அதை உபயோகியுங்கள்! உங்கள் பிள்ளையுடன் உங்கள் இல்ல மொழியில் வாசிப்பதும் பேசுவதும் மிகவும் அனுகூலமானதாகும்.

வாசிப்பதற்கும் எழுதுவதற்கும் பழகுவது பல கட்டங்களை உள்ளடக்கியுள்ளது; இது சரளமான வாசிப்பிற்கும் தெளிவான எழுதுதலிற்கும் வழிவகுக்கின்றது. அடுத்துவரும் சில பக்கங்கள், ஆரம்ப வருடங்கள் முதல் ஆரம்பநிலைத் தரங்களும் அதற்கப்பாலும் எவ்வாறு எழுத்தறிவு விருத்தியாகின்றது என்பதை எடுத்துக்காட்டுகின்றன.



## உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் ஆரம்பிக்க முன்னர்

இளம் பிள்ளைகள் ஆர்வமிக்க கற்போராவர்; அவர்கள் எழுத்தறிவுத் திறன்களை பல்வேறு வழிமுறைகளில் விருத்திசெய்துகொள்ளலாம். இக்கட்டத்தில் உங்கள் பிள்ளை:

- வேறொருவர் அவருக்கு வாசிப்பதையும், புத்தகங்கள் மற்றும் சொற்களைப் பார்வையிடுவதையும் விரும்புகின்றார்
- எழுத்துக் கட்டைகளுடன் விளையாடுதல், படப் புத்தகங்களைப் பார்வையிடுதல், காந்த எழுத்துகளுடன் விளையாடுதல், பாடல்களைப் பாடுதல், மற்றும் எளிய போக்குவரத்துச் சின்னங்களை அல்லது உணவுப் பொதிகைகளிலுள்ள இலக்கினைகளை வாசிப்பதன் மூலம் சொற்களைப் பற்றி கற்கின்றார்
- காகிதத்தில் அல்லது கணினியில், படங்கள், குறியீடுகள் மற்றும் எழுத்துகளை உபயோகித்து, அவரின் சொந்தச் சிந்தனைகள் எழுத்துவடிவாக மாற்றப்படக்கூடும் என்பதை புரிந்துகொள்ள ஆரம்பிக்கின்றார்
- ஒரு வாசகரைப் போன்று செயற்பட ஆரம்பிக்கின்றார் - உதாரணத்திற்கு, ஒரு புத்தகம் அல்லது மின்னூல் படிப்பானை (ஈ-ரீடெர்) பிடிக்கின்றார், அல்லது கணினிச் சுட்டியை செயற்படுத்தி வாசிக்குமாறு பாவனை செய்கின்றார்
- ஒரு எழுத்தாளரைப் போன்று செயற்பட ஆரம்பிக்கின்றார் உதாரணத்திற்கு, ஒரு பென்சில், வண்ணக்கோல் (கிரேயோன்), அல்லது பேனாவை பிடித்து எழுதுவதைப் போல் பாவனை செய்கின்றார், எழுத்துப்பலகையில் தட்டச்சு செய்கின்றார், விளையாட்டுக் களியை (கிளேய்) கொண்டு எழுத்துகளை அமைக்கின்றார்
- நினைவூட்டுகை மற்றும் படங்கள் இரண்டையும் உபயோகித்து கதையைக் கூறுகின்றார்
- அறிய ஆர்வமிக்கதாக இருப்பதுடன் அவரின் உலகைப் பற்றி பெருமளவு கேள்விகளை வினவுகின்றார்




சில மகிழ்வூட்டும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு, www.tvokids.com இனை அணுகி பின்வரும் சிறந்த விளையாட்டுகளுக்கு "Ages 2 to 5" என்பதை சொடுக்குங்கள்.

### எழுத்து/ஓசை அடையாளங்காணல் (ஃபொனிக்ஸ்)

**Magic Mailbox ABC's**
எழுத்துவரிசையின் வெவ்வேறு எழுத்துகளின் பெயர்களை கேட்பதற்கு தபால்பெட்டியைச் சொடுக்குங்கள்.
www.tvokids.com/games/magicmailboxabcs

**Letterella** (Beginner மட்டம்)
எழுத்துவரிசையின் வெவ்வேறு எழுத்துகளின் ஓசைகளைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள்.
www.tvokids.com/games/letterella

### எம்மைச் சுற்றி காணப்படும் வாசிப்பு(சூழல்சார்ந்த அச்சிடுகை)

**Sign Match**
உங்களைச் சுற்றி காணப்படும் சின்னங்களை இணைத்துவையுங்கள்.
www.tvokids.com/games/signmatch

### நாம் வாசிப்பதைப் புரிந்துகொள்ளுதல் (வாசிப்பதைப் புரிதல்)

**Out of Order**
கதைக்குரிய சித்திரங்களை ஒழுங்குசெய்யுங்கள்.
www.tvokids.com/games/outorder

**Gisèle's Big Backyard Book Club**
சிறந்த கதைகளை உற்றுக்கேளுங்கள்!
www.tvokids.com/activities/gisèlesbigbackyardbookclub

# வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள்

## உங்கள் பிள்ளை முதன்முதலாக வாசிக்கவும் எழுதவும் கற்கும்பொழுது

பிள்ளைகள் முதன்முதலாக வாசிக்கவும் எழுதவும் கற்கும்பொழுது, அவர்கள் வாசிக்கும் கருத்துகளைப் பற்றி உரையாடுவது முக்கியமானதாகும். இது அவர்களின் புரிந்துகொள்ளும் திறனை விருத்திசெய்யும். இக்கட்டத்தில், உங்கள் பிள்ளை:

- எழுத்துவடிவிலுள்ள சொற்களை பேச்சுவடிவிலுள்ள சொற்களுக்கு இணைக்கவும் ஓசைகளுக்கும் எழுத்துகளுக்குமிடையே காணப்படும் தொடர்புகளை அவதானிக்கவும் ஆரம்பிக்கின்றார்
- வாசித்தலுடன் சோதனை செய்யவும் வாசிக்கும்பொழுது சொற்களை உரக்கச் சொல்லவும் ஆரம்பிக்கின்றார்
- சொற்களின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வதற்கு, குறித்த பக்கத்தில் அல்லது திரையில் காணப்படும் படங்களை உதவிகரமாகக் காண்கிறார்
- எழுதுதலுடன் சோதனை செய்ய ஆரம்பிக்கின்றார் - உதாரணத்திற்கு, எழுத்துகளைப் போன்றிருக்கும் சின்னங்களை எழுதுகிறார்; தொடர்பற்ற எழுத்துகளை தொகுப்பாக எழுதுகிறார்; பின் படிப்படியாக உண்மையான சொற்களை எழுதுகிறார்
- அவர் கற்க விரும்புவதைப் பற்றி கேள்விகள் கேட்கின்றார் (இந்த ஆர்வத்திற்கு ஊக்கமளியுங்கள்!)



சில மகிழ்வூட்டும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு, www.tvokids.com இனை அணுகி பின்வரும் சிறந்த விளையாட்டுகளுக்கு "Ages 2 to 5" என்பதை சொடுக்குங்கள்.

### எழுத்து/ஓசை அடையாளங்காணல் (∴பொனிக்ஸ்)

**Alphabet Goop**
பழக்கப்பட்ட சொற்களின் ஆரம்ப ஓசைகளைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள்.
www.tvokids.com/games/alphabetgoop

**Letterella** (**Pro** மட்டும்)
பழக்கப்பட்ட சொற்களின் ஆரம்ப ஓசைகளைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள்.
www.tvokids.com/games/letterella

### ஒலியியைபுபடுத்துதல்: சிறுவர் பாடல்கள் மற்றும் ஒலியியைபான சொற்கள்

**Loosey Goosey Rhymes**
சிறுவர் பாடல்களில் ஒரே ஒலி நயத்தைக் கொண்ட சொற்களைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள்.
www.tvokids.com/games/looseygooseyrhymes

**Rhyme Time**
இம் மகிழ்வூட்டும் சிறுவர் பாடல்களைப் பார்வையிடுங்கள், சொடுக்குங்கள், கற்றுக்கொள்ளுங்கள், மற்றும் உற்றுக்கேளுங்கள்.
www.tvokids.com/games/rhymetime

### நாம் அடிக்கடி காணும் சொற்கள்: பார்வைச் சொற்கள்/ அடிக்கடி நேரிடும் சொற்கள்

**Melvin's Marvellous Words**
பார்வைச் சொற்களை கற்பதால் நீங்கள் கூடியளவு சிறந்த வாசகராகலாம்.
www.tvokids.com/games/melvinsmarvellouswords


**Melvin's Marvellous Stories**
பார்வைச் சொற்களை கற்பதால் நீங்கள் கூடியளவு சிறந்த வாசகராகலாம்.
www.tvokids.com/games/melvinsmarvellousstories

# வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள்

## உங்கள் பிள்ளை வாசிக்கவும் எழுதவும் கற்கும்பொழுது

ஒழுங்கான பயிற்சியுடன், பிள்ளைகள் வாசிப்பதிலும் எழுதுவதிலும் சரளத்தை விருத்திசெய்துகொள்கின்றனர். அதே வேளையில், அவர்கள் வாசிக்கும் கதைகள் அல்லது தகவல்களைப் பற்றி கூடியளவு ஆழமாக சிந்திக்கவும் பழகிக்கொள்வார்கள். இக்கட்டத்தில், உங்கள் பிள்ளை:

- வெவ்வேறு வகையான வாசிப்பு மூலங்களிற்கு அவரின் வாசித்தலை மாற்றியமைத்துக்கொள்கிறார்; பல சொற்களை அடையாளங்காண்கிறார்; சொற்களை எவ்வாறு புரிந்துகொள்வது என்பதை அறிந்துள்ளார்; அத்துடன் புதியனவற்றை தன்விருப்புடன் வாசிக்க முயற்சிக்கிறார்
- உண்மையான எழுத்துகள், சொற்களுக்கிடையே இடைவெளிகள், மற்றும் சில நிறுத்துக்குறிகள் ஆகியவற்றை உபயோகித்து எளிய வசனங்களை எழுதுகின்றார்
- எழுதுவதை விரும்புவதுடன் வெவ்வேறு விதங்களில் எழுதுவதிலும் ஆர்வங் காண்பிக்கின்றார் - உதாரணத்திற்கு, மளிகைப் பொருட்களின் பட்டியல்கள், குறுகிய மின்னஞ்சல்கள் அல்லது அலைபேசி குறுந்தகவல்களை எழுதுகின்றார்
- ஊடகங்கள் வெவ்வேறு நோக்கங்களிற்காக உபயோகிக்கப்படுகின்றன என்பதை அறியவருகின்றார் - உதாரணத்திற்கு, கற்பிப்பதற்கு, ஒரு செய்தியைத் தெரிவிப்பதற்கு, அல்லது ஒரு பொருளை விற்பதற்கு




வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள் சில மகிழ்வூட்டும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு, www.tvokids.com இனை அணுகி பின்வரும் சிறந்த விளையாட்டுகளுக்கு "Ages 11 and Under" என்பதை சொடுக்குங்கள்.

### எழுத்து/ஓசை அடையாளங்காணல் (∴போனிக்ஸ்)

**Word Hunt**
tvokids.com முறையின்படி Hangman (ஹெங்மேன்). குளிர்க்காலத்திற்கான வடிவுருவையும் விளையாடுங்கள்! www.tvokids.com/games/vikingwordhunt and www.tvokids.com/games/vikingwinterwordhunt

**Word Magic**
தனியாக அல்லது இன்னொருவருடன் எழுத்துக்கூட்டுதலை பயிற்சிசெய்யுங்கள். www.tvokids.com/games/wordmagic

### நாம் வாசிப்பதைப் புரிந்துகொள்ளுதல் (வாசித்தற் கருத்தறிவு): பொருட்களை வர்ணித்தல்

**Bump-A-Word**
வர்ணிக்கும் சொற்களை உபயோகிப்பதன் மூலம் உங்கள் எழுத்தாக்கங்களை கூடியளவு சுவாரசியமானதாக்குங்கள். www.tvokids.com/games/tumbletownbumpaword

### இலக்கணம்: பேச்சின் பகுதிகள்

**Big Escape**
பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பெயரெச்சங்கள் மற்றும் வேறு இலக்கண விடயங்களைப் பற்றி கற்றுக்கொள்ளுங்கள். (The Big Escape இன் நான்கு அத்தியாயங்களையும் நிச்சயமாகப் பார்க்கத் தவறாதீர்கள்.) www.tvokids.com/games/bigescape

# வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள்

## உங்கள் பிள்ளை கூடியளவு சரளமான வாசகராகவும் தெளிவான எழுத்தாளராகவும் ஆகும்பொழுது

சரளமான வாசகர்கள், அவர்கள் அனுபவித்துள்ள வேறு சம்பவங்களின் சூழமைவில் தற்பொழுது வாசிப்பதைப் பற்றி சிந்திக்கின்றனர். இக்கட்டத்தில், உங்கள் பிள்ளை:

- எழுத்துவடிவிலுள்ள கருத்துகளையும் அனுபவங்களையும் அவரின் சொந்த அறிவுடனும் அனுபவத்துடனும் தொடர்புபடுத்துகின்றார்
- ஒரு கதையிலுள்ள நிகழ்வுகளை முன்கூறுகின்றார்
- வாசித்தலை மதிப்பதுடன், தன்முயற்சியாலேயே வாசிக்கின்றார்
- வாசிப்பு திறன்களை எழுதுவதற்கு உபயோகிப்பதுடன் பின்வருவனவற்றையும் செய்ய ஆரம்பிக்கின்றார்:
    - சொற்களை எழுத்துக்கூட்டுவதற்கு பல்வேறுபட்ட உத்திகளை கையாளுதல்
    - பல்வேறுபட்ட வகையான வசனங்களை உபயோகித்தல்
    - அவர் அக்கறை கொண்டுள்ளவற்றைப் பற்றி எழுதுதல் (அது உங்கள் குடும்பம், வீடியோ விளையாட்டு அல்லது ஒரு செல்லப்பிராணியாக இருக்கக்கூடும்)



வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள் சில மகிழ்வூட்டும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு, www.tvokids.com இனை அணுகி பின்வரும் சிறந்த விளையாட்டுகளுக்கு "Ages 11 and Under" என்பதை சொடுக்குங்கள்.

### சொல் குதூகலம்: எழுத்துக்கூட்டுதல், கருத்தறிவு, சொல் விளையாட்டுகள்

**The Amazing Spelling Fleas**
சுவாரசியமான இலக்கணம், எழுத்துக்கூட்டுதல், மற்றும் வாசித்தற் கருத்தறிவு.
www.tvokids.com/games/amazingspellingfleas

### எழுத்துக்கூட்டுதல்: பழக்கமற்ற சொற்களை எழுத்துக்கூட்டுதல்

**Spot and Spell**
எல்லா சொற்களையும் சரியாக எழுத்துக்கூட்ட முயற்சியுங்கள்.
www.tvokids.com/games/spotandspell

**Reading Round-Up**
tvokids.com முறையில் சொல் தேடுகை!
www.tvokids.com/games/readingroundup

### வாசித்தல்: எல்லா மட்டங்களுக்கும் புத்தக தலைப்புகள் மற்றும் மதிப்பாய்வுரைகள்

**Tumbletown Reads Book Club**
சிறுவர்களால் எழுதப்பட்ட புத்தக மதிப்பாய்வுரைகளை வாசியுங்கள்.
www.tvokids.com/activities/tumbletownreadsbookclub


# வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள்

## உங்கள் பிள்ளை ஒரு வாசகராகவும் எழுத்தாளராகவும் வளர்ச்சியடையத் தொடரும்பொழுது

*திறனாய்வு சார்ந்த எழுத்தறிவு* என்பது, நாம் வாழும் உலகை புரிந்துகொள்வதன் பொருட்டு, எழுத்துவடிவில் அல்லது வேறு ஊடகங்களில் காணப்படும் உள்ளார்ந்த தகவல்களை பரிசீலனைச் செய்து கலந்துரையாடுவதாகும்.

எழுதுவதற்கான நோக்கங்களைப் பற்றி சிந்திக்கும்பொழுதும், எழுத்துவடிவிலுள்ளவை (புத்தகங்கள், இணையதளங்கள், சஞ்சிகைகள், சுவரொட்டிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது) எவ்வாறு வித்தியாசமான கண்ணோட்டங்கள், நம்பிக்கைகள், மற்றும் நோக்குநிலைகளை பிரதிபலிக்கின்றன என்பதைப் பற்றி உரையாடும்பொழுதும், பிள்ளைகள் திறனாய்வு சார்ந்த எழுத்தறிவுத் திறன்களை பயிற்சிசெய்கின்றனர். இக்கட்டத்தில், உங்கள் பிள்ளை:

- வெவ்வேறு வகையான எழுத்துவடிவங்களை கூடியளவு துல்லியமாக, விரைவாக, மற்றும் உணர்ச்சி வெளிப்பாட்டுடன் வாசிக்கவும் புரிந்துகொள்ளவும் இயலுமானதாக காணப்படுகின்றார்
- அபிப்பிராயங்களையும் கண்ணோட்டங்களையும் வெளிப்படுத்துவதற்கு வாசிக்கவும், எழுதவும், பல்வேறுபட்ட ஊடகங்களை உருவாக்கவும் இயலுமானதாக காணப்படுகின்றார் (வீடியோக்களை உருவாக்குதலும் பார்வையிடுதலும், வலைப்பதிதல், மற்றும் வரைப்பட நாவல்களை வாசித்தல் போன்றவை)
- வாசித்தல் மற்றும் எழுதுதலின் சமூகரீதியான கோணத்தில் ஆர்வம் கொண்டிருப்பதுடன், அவர் தேர்ந்தெடுக்கும் எழுத்துவடிவங்களைப் பற்றிய சிந்திப்புகளையும் எண்ணங்களையும் பகிர்வதை விரும்புகின்றார் (நண்பர்களுடனான கலந்துரையாடல்கள், சமூக ஊடக இணையதளங்கள், மற்றும் உடனடி செய்தியனுப்பல் மூலம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதால் போன்று)




வாசித்தல் மற்றும் எழுதுதல் முக்கியகட்டங்கள் சில மகிழ்வூட்டும் செயற்பாடுகளைக் கண்டறிவதற்கு, www.tvokids.com இனை அணுகி பின்வரும் சிறந்த விளையாட்டுகளுக்கு "Ages 11 and Under" என்பதை சொடுக்குங்கள்.

### சொல் குதூகலம்: எழுத்துக்கூட்டுதல், கருத்தறிவு, சொல் விளையாட்டுகள்

**The Amazing Spelling Fleas**
சுவாரசியமான இலக்கணம், எழுத்துக்கூட்டுதல், மற்றும் வாசித்தற் கருத்தறிவு.
www.tvokids.com/games/amazingspellingfleas

### எழுத்துக்கூட்டுதல்: பழக்கமற்ற சொற்களை எழுத்துக்கூட்டுதல்

**Spot and Spell**
எல்லா சொற்களையும் சரியாக எழுத்துக்கூட்ட முயற்சியுங்கள்.
www.tvokids.com/games/spotandspell

**Reading Round-Up**
tvokids.com முறையில் சொல் தேடுகை!
www.tvokids.com/games/readingroundup

### வாசித்தல்: எல்லா மட்டங்களுக்கும் புத்தக தலைப்புகள் மற்றும் மதிப்பாய்வுரைகள்

**Tumbletown Reads Book Club**
சிறுவர்களால் எழுதப்பட்ட புத்தக மதிப்பாய்வுரைகளை வாசியுங்கள்.
www.tvokids.com/activities/tumbletownreadsbookclub

# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

## முதலாவது உத்தி உங்கள் பிள்ளையுடன் உரையாடுங்கள்

> கற்பது, உற்றுக்கேட்பதன் ஒரு விளைவாகும், இது மேலும் சிறந்த கேட்டலிற்கும் மற்ற நபரை கவனிக்கும் தன்மைக்கும் வழிவகுக்கின்றது. மற்றொரு விதத்தில் சொல்வதானால், பிள்ளையிடமிருந்து கற்பதற்கு, எமக்கு பச்சாதாபம் அவசியம்; பச்சாதாபம் நாம் கற்கும்போது வளர்ச்சியடைகின்றது.
>
> **Alice Miller, 2002**
> *For Your Own Good*

அது வெளிப்படையானதாக காணப்பட்டாலும், உங்கள் பிள்ளையுடன் கதைப்பதைப் போலவே, அவருக்கு செவிசாய்ப்பதும் சமமான முக்கியத்துவத்தைக் கொண்டதாகும். பேசுதல் மற்றும் உற்றுக்கேட்டல் இரண்டினதும் மூலம் வாசித்தலிற்கும் எழுதுதலிற்குமான திறன்களைப் பிள்ளைகள் விருத்திசெய்துகொள்கின்றனர்.

கீழ்வருவனவற்றைச் செய்வதன் மூலம், சொற்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பதை உங்கள் பிள்ளை கற்றுக்கொள்ள நீங்கள் உதவலாம்:

- வீதியில் காணப்படும் சின்னங்கள் போன்ற அச்சிலுள்ள எழுத்துகளின் ஓசைகளை உரக்கச் சொல்லுதல்
- சொல் விளையாட்டுகளைப் பாடுதல் - ஆரம்ப ஓசைகளுக்கு பதிலாக வேறு ஓசைகளை உபயோகித்து புதிய, நகைச்சுவையான சொற்களை உங்கள் பிள்ளை உருவாக்கலாம்
- உங்கள் பிள்ளை அறிந்த எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களின் எழுத்துக்கூட்டல்களை உருவாக்குங்கள்

உங்கள் பிள்ளை புதியனவற்றை புரிந்துகொள்ளும் ஆற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் பேச்சு உதவுகின்றது. இத்தகைய பேச்சு, உங்கள் பிள்ளைக்கு யாதேனுமொன்றை தெரிவிக்க பேசுவதற்கு ("நீங்கள் பல்துலக்க நேரமாகிவிட்டது," அல்லது "இரவுநேர உணவிற்கு முதல் கைகளைக் கழுவுங்கள்" போன்று) அப்பால் செல்கின்றது; இது அவருடன் உரையாடல் செய்வதைப் பற்றியதாகும். இத்தகைய பேச்சை உங்கள் இல்லத்திற் தொடக்கி வைப்பதற்கு சில வழிமுறைகள் இங்கு தரப்பட்டுள்ளன:

- **பிரச்சினைகள் மற்றும் தீர்வுகளைப் பற்றி உங்கள் பிள்ளையுடன் உரையாடுங்கள்.** உங்களுக்கு மிகவும் பிடித்தமான தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கோ, ஒன்றாக இணையத்தை உபயோகிப்பதற்கோ ஆயத்தமாகவிருப்பதற்கு, இரவுநேர உணவைத் தயாரிக்க நேரத்தை கண்டுபிடிப்பது போன்ற அன்றாட பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வது என்பதைக் குறித்து உரையாடுங்கள்.

# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

- **உங்கள் பிள்ளைக்கு சிந்திக்க நேரமுள்ளது என்பதை உறுதிப்படுத்துங்கள்.** அடுத்து என்ன சொல்வது என்பதை சிந்திப்பதற்கு சிலவேளைகளில் நேரம் செல்கின்றது. உங்கள் பிள்ளை என்ன கூற இருக்கின்றார் என்பதையறிய காத்திருக்க தயாராகவிருங்கள். "நான் என்ன சிந்திக்கிறேன் என்று எனக்கு தெரியாது," என்று அவர் கூறினால் அதைவிட சிறந்தவொரு விடைக்கு காத்திருங்கள் - உள்ளே எங்கேயோ அது இருக்கின்றது!
- **உங்கள் பிள்ளையுடன் அவரின் முதல் மொழியில் உரையாடுங்கள்.** ஒரு மொழியிற் கொண்ட அறிவை மற்றொரு மொழியிற்கு பிள்ளைகள் மிக நன்றாக மாற்றிக்கொள்கின்றனர். உங்கள் முதல் மொழியில் பேசுதல், ஆங்கிலம், பிரெஞ்ச், மற்றும் வேறு மொழிகளையும் கற்பதற்கு உங்கள் பிள்ளைக்கு உதவும். அத்துடன், அவரின் சொந்த கலாச்சார வரலாறைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்புகளையும் உங்கள் பிள்ளைக்கு இது வழங்கும்.
- **அவரின் கருத்துகளைப் பற்றி பேசத் தூண்டும் கேள்விகளை உங்கள் பிள்ளையிடம் வினவுங்கள்.** உங்கள் பிள்ளையிடம் ஏதேனுமொன்றை உடனடியாகக் கூறாமல், அவர் சிந்திப்பதைப் பற்றி பேசத் தூண்டும் ஒரு கேள்வியை வினவ முயற்சி செய்யுங்கள். உதாரணத்திற்கு, ஒரு குடும்ப நிகழ்வை நீங்கள் எவ்வாறு கொண்டாடத் திட்டமிடுகின்றீர்கள் என்பதைக் கூறாமல், ஒரு திட்டத்தை உருவாக்குவதைக் குறித்து அவரின் கருத்துகள் என்ன என்பதை வினவுங்கள். (ஆக்கபூர்வமான எண்ணங்களுக்கும் அத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கும் தயாராகவிருங்கள்!)

சுதந்திரமான, சரளமான வாசகர்கள் ஆகிவிட்ட பின்பும், உங்கள் பிள்ளைகள் உரக்க வாசிக்கும்பொழுது உற்றுக்கேட்பதும், அவர்களுக்கு நீங்கள் தொடர்ந்து வாசிப்பதும் மிக முக்கியமாகும். ஒன்றுசேர்ந்து வாசிப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன: பக்கங்களை மாறி மாறி வாசித்தல், ஒன்றாக வாசித்தல், மற்றும் வாசிக்கும்பொழுது இடையிடையே பேசுவதற்கு நிறுத்துதல். அவர்கள் ஆர்வங்கொண்ட விடயங்களைப் பற்றிய புத்தகங்களையே பிள்ளைகள் தேர்ந்தெடுக்கின்றனர்; அதே புத்தகங்களில் நீங்களும் ஆர்வங்காண்பித்தால், அது பேச்சு மற்றும் உற்றுக்கேட்கும் திறன்களை விருத்திசெய்யும் வளம் மிகுந்த உரையாடல்களுக்கு வழிவகுக்கும்.

### உங்களுக்கு கடினமாகவிருந்தால், உங்கள் உரையாடலைத் தொடக்கி வைப்பதற்கான சில "பேச்சு தொடக்கிகள்" இங்குள்ளன:

- நீங்கள் … ஐப் பற்றி கவனித்தது என்ன…
- நீங்கள் வேறு எதை செய்திருக்கக்கூடும்…
- நீங்கள் … இடம்பெற்றால் என்ன செய்வீர்கள்…
- இவ்வாறு நடந்தால் என்ன நடக்கும்…
- எவ்வாறு அதை அறிந்தீர்கள்?
- அதைப்பற்றி என்னை நம்பவையுங்கள்!

### நீங்கள் உற்றுக்கேட்கும் வேளையில்

- புத்தகமொன்று வாசிக்கப்படுவதானால், அறிய ஆவலாக இருப்பதாலும், கேள்விகள் வினவுதாலும் நீங்கள் புத்தகத்தை இரசிக்கின்றீர்கள் என்பதைக் காண்பியுங்கள்.
- அவர் ஏற்கனவே அறிந்தவற்றிற்கு இணைப்புகளை அமையுங்கள்.
- நீங்கள கேட்பதை வேறுவிதமாக கூறுங்கள்.
- பொறுமையாகவிருங்கள். கடினமான சொற்களை வாசிப்பதற்கு உங்கள் பிள்ளைக்கு போதியளவு நேரம் காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- வாசித்து முடித்த பின்பு, புத்தகத்தின் சுவாரசியமான மற்றும் புதிரான பகுதிகளைப் பற்றி உரையாடுங்கள்.

## இரண்டாவது உத்தி புரிந்துகொள்வதற்கான பழக்கங்களை கட்டமையுங்கள்

> நீங்கள் எவ்வளவு அதிகமாக வாசிக்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமானவற்றை அறிவீர்கள். நீங்கள் எவ்வளவு அதிகமாக கற்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமான இடங்களிற்கு செல்வீர்கள்.

**Dr. Seuss, 1978**
*I Can Read with My Eyes Shut!*

வாசிப்பதன் மூலம் தன்னைப் பற்றியும் உலகைப் பற்றியும் கற்றுக்கொள்ள - ஆசிரியர்கள் இதை "புரிந்துணர்வுடன் வாசித்தல்" என்றழைக்கின்றனர் - கீழேயுள்ளவற்றைப் போன்ற சில உத்திகளை முயற்சிசெய்வதன் மூலம் உங்கள் பிள்ளைக்கு நீங்கள் உதவலாம்:

- **கேள்விகளை வினவுதல்.** உங்கள் பிள்ளையுடன் வாசிக்கும்பொழுது, "ஏன் இப்படி இடம்பெறுகின்றது?", "அடுத்து இடம்பெறக்கூடியதென்ன?", "இது அர்த்தமளிக்கின்றதா?", அல்லது "இவ்வாறு இடம்பெற்றபோது நியாயமாகவிருந்ததா...?" போன்ற கேள்விகளை வினவுங்கள். இத்தகைய கேள்விகள் ஒரு கதையின் பகுதிகளிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள பிள்ளைகளுக்கு உதவுகின்றன.
- **"வரிகளுக்கிடையே" வாசித்தல்.** ஊகிப்பதற்கு – நேரடியாகக் கூறப்படாத அர்த்தத்தைக் கண்டறிவதற்கு – கதையிலிருந்தும், சொந்த அறிவு மற்றும் அனுபவத்திலிருந்தும் பெற்ற தகவல்களை உபயோகிப்பதற்கு உங்கள் பிள்ளை கற்றுக்கொள்வது அவசியமாகும். இந்த "வரிகளுக்கிடையே" வாசித்தல் உத்தியானது, துப்புகளைச் சேகரித்து அவற்றைக் கொண்டு அர்த்தத்தை "உருவாக்குவதை" உள்ளடக்குகின்றது.
- **எல்லாவற்றையும் ஒன்றிணைத்தல்.** முதலில், வாசித்த எல்லா தகவல்களையும் பற்றி பேசிவிட்டு, பின்னர் முக்கிய புள்ளிகளை சுருக்கிக்கூறி, அவற்றை திருகுவெட்டுப் புதிரொன்றின் துண்டுகளைப் போல் ஒன்றிணைப்பதன் மூலம் உங்கள் பிள்ளையை எல்லாவற்றையும் ஒன்றிணைக்கும்படி ஊக்கமளிக்கலாம்.
- **கடினமான சொற்களைப் பொருள்படுத்துதல்.** ஒரு சொல் யாதாகவிருக்கும் என்பதை பொருள்படுத்துவதற்கு அல்லது ஒரு தவறை அடையாளங்காண்பதற்கு உங்கள் பிள்ளைக்கு அவகாசம் கொடுங்கள். குறிப்பிட்ட தவறொன்று அர்த்தத்தைப் பாதிக்காவிட்டால், அதை பெரிதுபடுத்தாதீர்கள். அவர் அறிந்திராத சொல்லொன்றை பொருள்படுத்துவதற்கு உங்கள் பிள்ளை பல்வேறு உத்திகளை உபயோகிக்கலாம்:
    - சொல்லின் ஓசையை உரக்கக்கூறுங்கள்.
    - சித்திரங்களைப் பாருங்கள்.
    - கடினமான சொல்லிற்கு முன்னேயும் பின்னேயும் காணப்படும் சொற்களை மீண்டும் வாசியுங்கள்.
    - அந்த நேரத்திற்கு அச்சொல்லை புறக்கணித்துவிட்டு தொடர்ந்து வாசியுங்கள்.
    - புரிந்துணர்வை சரிபார்ப்பதற்கு அத்தருணம் வரை வாசித்திருப்பதைப் பற்றி உரையாடுங்கள்.
    - ஒரு சகோதரன் அல்லது சகோதரியிடம் விடையைக் கேளுங்கள்.

# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

உங்கள் பிள்ளை ஊடகம்-செறிந்த, தொழில்நுட்பரீதியான உலகில் வளர்ந்து வருகின்றார். சமூக மாற்றங்கள் வெகு விரைவாக இடம்பெறுவதால், அச்சிட்ட வடிவில் அல்லது வேறு ஊடகங்களினால் வெளியிடப்படும் செய்திகளின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் பற்றி சிந்திப்பதற்கு பிள்ளைகளுக்கு நேரம் தேவைப்படுகின்றது. திறனாய்வு சார்ந்த எழுத்தறிவுத் திறன்களை வளர்க்க உதவுவதற்கு உங்களுக்கு சில வழிகள் இங்கு வழங்கப்பட்டுள்ளன:

- பேச்சாளரின் கண்ணோட்டம் அல்லது நோக்குநிலையை புரிந்துகொள்வதற்கு உங்கள் பிள்ளைக்கு உதவுங்கள்.
- செய்தியின் நியாயத்தைப் பற்றி கலந்துரையாடி, தகவல்கள் உள்ளடக்கப்படாததால் தவறான எண்ணம் தோற்றுவிக்கும் விளைவுகளைக் கண்டறியுங்கள்.
- மக்களை இணங்கச் செய்வதற்கு எவ்வாறு மொழி உபயோகிக்கப்படுகின்றது என்பதைப் பற்றி உரையாடுங்கள் - உதாரணத்திற்கு, விளம்பரம் செய்தலில் மொழியின் சக்திமிக்க தாக்கத்தைப் பற்றி உரையாடுங்கள்.
- புதிய கேள்விகளை வினவத்தூண்டும் யாதேனுமொரு புதிய விடயத்தை உங்கள் பிள்ளை அறிந்துகொண்டுள்ளாரா என்று வினவுங்கள். அவ்விடயத்தைப் பற்றி உங்கள் பிள்ளை சிந்தித்திருப்பதை இது மாற்றுகின்றதா? அது சரியானதா என்பதை அவர் எவ்வாறு கண்டறியலாம்?

**உங்கள் பிள்ளையை திறனாய்வு சார்ந்த முறையில் வாசிக்க ஊக்குவிப்பதற்கு, கேள்விகளை வினவுங்கள்:**

- இப்புத்தகம் எதைப் பற்றியது? அதை வாசிப்பதற்கு நீங்கள் ஏன் ஆர்வம் கொண்டுள்ளீர்கள்?
- இந்த செய்திக் கட்டுரையின் எழுத்தாளர் நாம் எதை அறியவேண்டும் அல்லது சிந்திக்கவேண்டும் என்று விரும்புகின்றார்?
- நாம் ஏதேனுமொன்றை நம்பவேண்டும் என்று இவ்வெழுத்தாளர் விரும்புகின்றாரா?
- பிள்ளைகள், பதின்மவயதினர், மற்றும் பெற்றோரைப் பற்றி இந்த சஞ்சிகையின் கருப்பொருள் எதைப் பிரதிபலிக்கின்றது?
- இச்செய்தியை தெரிவிப்பதற்கு எவ்வாறு சொற்களையும் படங்களையும் எழுத்தாளர் உபயோகித்துள்ளார்?



# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

## மூன்றாவது உத்தி ஒவ்வொரு நாளும் வாசியுங்கள்

> …எனது சிறந்த இராச்சியத்திலுள்ள பிள்ளைகள், பாடசாலைக்கு வருவதற்கு வெகு முன்னரே இலகுவாக வாசிக்கக் கற்றிருப்பார்கள்… ஆகவே தயவுசெய்து, மிகச்சிறந்த புத்தகங்களை உங்கள் பிள்ளைகளுக்கு உரக்க வாசிக்குமாறு நான் உங்கள் எல்லோரிடமும் வேண்டுகிறேன்! அவர்கள் பிறந்த நாளன்றே ஆரம்பியுங்கள்.

**Mem Fox, 2005**
"If I Were Queen of the World"

ஒவ்வொரு நாளும் உங்கள் பிள்ளையுடன் வாசிக்க முயற்சி செய்யுங்கள். எல்லா குடும்ப அங்கத்தவர்களும் உதவலாம். (இது காலைநேர உணவைப் போன்றது – அது தவிர்த்தலாகாது!) உங்கள் பிள்ளைக்கு வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வதற்கும், பாடசாலையில் வெற்றியெய்துவதற்கும் உதவுவதற்கு நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான செயல் அதுவே. இளவயதில் வாசித்துக் காட்டப்பட்ட பிள்ளைகள், வயதுகூடியதும் வாசித்தலை விரும்பி, சிறந்த வாசகர்களாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமானவையாகும். உங்கள் பிள்ளை மிக இளமையாக இருக்கும்போதே வாசிக்க ஆரம்பியுங்கள். இதனால் எதிர்மறையான விளைவுகள் எதுவுமில்லை!

நீங்களே உங்கள் பிள்ளையின் மிக முக்கிய வாசித்தற் முன்மாதிரி; ஆகையால், உங்கள் சொந்த காரணங்களுக்காக வாசிப்பதையும் எழுதுவதையும் உங்கள் பிள்ளை காண்கின்றார் என்பதை உறுதிசெய்யுங்கள். (அது மிக முக்கியமானதொரு புத்தகமாக இருக்கவேண்டியதில்லை – தொலைவாக இடம்பெயர்ந்த ஒரு நண்பரிடமிருந்து பெற்ற மின்னஞ்சலாக இருக்கக்கூடும்.) உங்கள் பிள்ளையின் ஆரம்ப ஆசிரியர் மற்றும் முன்மாதிரி என்ற முறையில், உங்கள் ஈடுபாடும் ஆதரவும் வாழ்க்கைப்பூராக கொண்டிருக்கும் மனப்பான்மைகளிலும் ஆர்வங்களிலும், வாசித்தல் மற்றும் எழுதுதலில் அடையும் சாதனையிலும் செல்வாக்கு அளிக்கின்றது.

உங்கள் அன்றாட ஓய்வற்ற அட்டவணையில், உங்கள் பிள்ளையுடன் நீங்கள் பகிர்ந்தகொள்ள விரும்பக்கூடிய வாசித்தல் மற்றும் எழுதுதல் செயற்பாடுகள் இங்குள்ளன:

- போக்குவரத்து, கடை, மற்றும் உணவக அடையாளங்களை வாசியுங்கள்.
- உணவு விபரப்பட்டிகள், கால அட்டவணைகள், நிலப்படங்கள், செயல்முறைக் கட்டளைகள், விளம்பரங்கள், துண்டுப்பிரசுரிப்புகள், மற்றும் விளம்பரத்தாள்கள் ஆகியவற்றை வாசியுங்கள்.
- சமையற் குறிப்புகள், சொற்களின் அர்த்தங்கள், மற்றும் ஒரு நிலப்படத்தில் காணப்படும் இடங்கள் ஆகியவற்றை இணையத்தில் கண்டறியுங்கள்.
- கொள்வனவு பட்டியல்களையும் தொலைபேசிச் செய்திக்குறிப்புகளையும் எழுதுங்கள்.
- சந்திப்புகளினதும் செயற்பாடுகளினதும் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றை ஒரு குடும்ப நாட்காட்டியில் எழுதுங்கள்.
- வாழ்த்து அட்டைகள், நன்றிகூறும் குறிப்புகள் அல்லது கடிதங்கள் (முகப்பெழுத்துகள், நேரொழுக்கான எழுத்துகள், அல்லது ஒரு விசைப்பலகையை பாவித்தல் அனைத்தும் ஏற்கத்தக்கதாகும்), மின்னஞ்சல்கள், மற்றும் எழுத்துவடிவ செய்திகளை வாசித்து மற்றும் எழுதுங்கள்.

# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

பிள்ளைகள் நடைமுறையொழுங்குகளுடன் நன்றாக செயற்படுகின்றனர்; ஆகவே, இயலுமென்றால், ஒன்றாக வாசிப்பதை நீங்களும் உங்கள் பிள்ளையும் ஒவ்வொரு நாளும் ஆவலுடன் எதிர்ப்பார்க்கும் ஒரு செயலாக அமையுங்கள். நீங்கள் ஒன்றாக செலவுசெய்யும் இந்நேரத்திலிருந்து அதிக விளைவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு சில எண்ணங்கள் இங்கே வழங்கப்பட்டுள்ளன:

அன்றாட வாசிப்பு நேரமொன்றை உருவாக்குங்கள்:

- உங்கள் முழுக் கவனத்தயும் உங்கள் பிள்ளையுடன் வாசிப்பதற்கு செலவுசெய்யக்கூடிய ஒரு விசேட நேரத்தை ஒவ்வொரு நாளும் ஒதுக்கிவையுங்கள்.
- எவ்விடயத்தைப் பற்றி மிக்க ஆர்வங்கொண்டுள்ளார் என்பதைக் கண்டறிந்து, அவ்விடயத்தைப் பற்றி உங்களுக்கு இயலுமானளவு அறிந்துகொள்ளுங்கள்.
- நூலகத்திற்கு ஒன்றுசேர்ந்து செல்லுங்கள், அல்லது மூலங்களிற்கு இணையத்தை அணுகுங்கள்.
- குறிப்பிட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சியிலிருந்து உங்கள் பிள்ளைக்கு மிக விருப்பமான ஒரு கதாபாத்திரத்தைக் கொண்டுள்ள புத்தகங்களை உபயோகியுங்கள்.
- இணையத்தினூடாக வாசிப்பதற்கு உங்கள் இல்லத்திலிருந்து அல்லது உள்ளூர் நூலகத்திலிருந்து (இவ்வழிகாட்டியின் பிற்புறத்தில் உள்ளவையைப் போன்று) சிறந்த இணையதளங்களை உபயோகியுங்கள்.
- விளையாட்டுகள், புதிர்கள், வரைகதைகள், அல்லது மென்பொருள் ஆகியவற்றிற்கு ஓரிடத்தை உள்ளடக்குங்கள்.
- உங்கள் பிள்ளையின் முதல் மொழியில் புத்தகங்களையும் வேறு மூலங்களையும் வாசியுங்கள். ஆங்கிலம், பிரெஞ்ச், மற்றும் வேறு மொழிகளில் வாசிப்பதற்கு இது உங்கள் பிள்ளைக்கு உதவும்.



## நான்காவது உத்தி அதை சுவாரசியமானதாக்குங்கள், அதை முக்கியமானதாக்குங்கள்

> ...[வாசித்தலை] சுவாரசியமானதாக்குங்கள். அது வீட்டுப்பயிற்சியைப் போல் இருத்தலாகாது. வாசித்தலை கேளிக்கையானதாக்குங்கள் - நகைச்சுவையான ஓசைகளைச் செய்து, ஒன்றுசேர்ந்து நடித்துக்காட்டுங்கள் - சிறுவர்கள் அதை மிகவும் விரும்புகின்றனர்!

**Robert Munsch, 2005**
"A Moment with Munsch"

### விதித் தொகுப்பை விடுவித்தல்

பிள்ளைகள் வாசிப்பதை விரும்பும்போது, அவர்கள் அதிகம் வாசிக்கின்றனர். மேலும், அவர்கள் அதிகம் வாசிப்பதனால், சிறந்த வாசகர்களாகின்றனர். விடயங்களைப் புரிந்துகொள்ளவும், தங்களையும் உலகையும் பற்றி மேலுமறிந்துகொள்ளவும் வாசிக்கின்றனர். (அல்லது அவர்கள் மாட்டிக்கொண்டிருக்கும் அந்த வீடியோ விளையாட்டைப் பற்றி வாசித்தறிய ஊக்கங்கொண்டிருக்கக்கூடும்!) அந்த தருணத்தில், உங்கள் பிள்ளைக்கு ஒரு முற்றிலும் புதிய உலகம் திறக்கப்படுகின்றது. அவர்கள் மொழியின் விதித் தொகுப்பை விடுவித்துவிட்டதால், அதன் இயக்கவியலுடன் சிக்கல்களை அனுபவிப்பதில்லை.

### எதை ஒன்றாக சேர்ந்து வாசிக்கப் போகின்றீர்கள் என்பதை தெரிவுசெய்யுங்கள்:

- உங்கள் பிள்ளைக்கு ஆர்வமிருக்கும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட எண்ணங்களிற்கு, இணையத்தை அணுகுங்கள்.
- புத்தகத் தலைப்புகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு நூலகம் அல்லது புத்தகக்கடைக்குச் செல்லுங்கள்.

### எல்லா விதமான புத்தகங்களையும் தேர்ந்தெடுங்கள், எல்லா விதமான வாசித்தற் மூலங்களையும் தெரிவுசெய்யுங்கள்:

- எல்லா விதமான புனைவு-அற்ற மூலங்களும் - Canada (கனடா) அல்லது உலகில் வேறு இடங்கள், காட்டு மிருகங்கள் அல்லது டைனசார்கள் பற்றிய ஆரம்ப வாசகருக்கான புத்தகங்கள் போன்றவை
- உலகத்தைப் பற்றி நேர்மறையான அல்லது சக்திமிக்க கருத்துகளைக் கொண்ட புத்தகங்கள் அல்லது கட்டுரைகள்
- எல்லா விதமான புனைவு மூலங்களும் - செயல்சார், கனவுருபுனைவு, விஞ்ஞான புனைவு, நகைச்சுவைக் கதைகள்
- தம்மை எவ்வாறு கண்டுகொள்கின்றார்கள் என்பதைப் பிரதிபலிக்கும் கதைகள்: சாகசன், வீரன், இளவரசி, மிருகங்களை விரும்புவர் (பிற்காலத்தில் மிருகவைத்தியர் ஆகக்கூடும்!), துப்பறிபவர், பராமரிப்பாளர் மற்றும் பல
- ஒரு தொடரில் வரும் புத்தகங்கள் (பழக்கமான கதாபாத்திரங்களுடன் அடையாளம் ஏற்படுத்துவதை பிள்ளைகள் விரும்புகின்றனர்)
- செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், இணைய-சந்தாக்கள்
- வரைகதை புத்தகங்களும் வரைப்பட நாவல்களும், கேலிச்சித்திரங்கள் (கார்டூன்), விகடங்கள், அடிப்பந்தாட்ட (பேஸ்போல்) அட்டைகள், விளையாட்டு புள்ளிகள், அறிவுப் புதிர்கள்
- அவர்களின் இசைச்சாரந்த அல்லது கலைச்சார்ந்த இரசனைகளைக் கவரும் பாடல் வரிகள் அல்லது நாடக எழுத்துவடிவங்கள்


# பெற்றோருக்கான நான்கு சிறந்த எழுத்தறிவு உத்திகள்

**கதையிற்கு உயிர்க்கொடுங்கள்:**

- ஒரு கதையிலுள்ள வெவ்வேறு கதாபாத்திரங்களுக்கு வெவ்வேறு குரல்களை உபயோகியுங்கள்.
- கதையில் ஒரு கதாபாத்திரத்தின் பெயர் எங்கு தோன்றினாலும், அதற்கு பதிலாக உங்கள் பிள்ளையின் பெயரை உபயோகியுங்கள்.
- கதையில் தோன்றும் கதாபாத்திரங்களை உங்கள் இருவருக்கும் தெரிந்த நபர்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். உண்மையான நபர்களுடன் அக்கதாபாத்திரங்கள் கொண்டுள்ள பொதுவான அம்சங்களைப் பற்றி உரையாடுங்கள்.
- கைப்பாவைகளை உருவாக்கி, கதையை நடித்துக்காட்டுவதற்கு அவற்றை உபயோகியுங்கள்.
- கதாபாத்திரங்களையும் சூழ்நிலையமைவுகளையும் வரைவதற்கு அல்லது நிறந்தீட்டுவதற்கு உங்கள் பிள்ளைக்கு ஊக்கமளியுங்கள். "ஒவ்வொரு படமும் ஒரு கதையைக் கூறுகின்றது" என்ற கருத்தைப் பற்றி உரையாடுங்கள்.
- அவருக்கு மிகவிருப்பமான கதைகளை உங்கள் பிள்ளை எத்தனை தடவை கேட்க விரும்புகின்றாரோ, அவ்வளவு தடவை அவற்றை மீண்டும் மீண்டும் வாசியுங்கள்.

**அதைத் தொடர்புடையதாக்குங்கள்:**

- பெரும்பாலான கதைகள் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டம் அல்லது நோக்குநிலையைப் பற்றி கூறுகின்றன என்பதை உங்கள் பிள்ளைக்கு புரிந்துகொள்வதற்கு உதவுங்கள். (வேறொரு கதாபாத்திரம் கதையிலுள்ள அக்கதையைக் கூறினால், எவ்வாறு கதை மாற்றமடையக்கூடும் என்பதைப் பற்றி நீங்கள் உரையாடக்கூடும்.)
- கதையில் மதிப்பு, சமூக மற்றும் கலாச்சார சமத்துவம் ஆகியவை காணப்படுகின்றனவா என்று பரிசோதியுங்கள். கதையிலுள்ள கதாபாத்திரங்கள் நியாயமாக வர்ணிக்கப்பட்டுள்ளார்களா?
- எழுத்தாளர் ஏன் இந்த கதையை எழுதியிருக்கக்கூடும் என்பதைப் பற்றி உரையாடுங்கள்; அக்கதை ஒரு சமூகஞ்சார்ந்த செய்தியைத் தெரிவிக்கின்றது எனில் இது கூடியளவு முக்கியமானதாகும்.
- செய்தித்தாளில், பதிப்பாசிரியருக்கான கடிதங்கள், தலையங்கங்கள், மற்றும் பத்திரிக்கையின் நிரல்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதன் மூலம், உலகத்தில் நடைபெறும் விடயங்களைப் பற்றிய வெவ்வேறு அபிப்பிராயங்களை ஆராயுங்கள்.



# உங்கள் பிள்ளையிடமிருந்து மிகச் சிறந்ததை எதிர்பாருங்கள்

சரளமாக வாசிப்பதற்கும் தெளிவாக எழுதுவதற்கும் உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஆதரவளிக்கும் பரபரப்பூட்டும் பயணத்தில், இவ்வழிகாட்டி உதவிகரமாக இருப்பதை உணர்ந்தீர்கள் என்று நாம் நம்பிக்கைக் கொள்கின்றோம். உயர்ந்த எதிர்ப்பார்ப்புகள், பொறுமை, மற்றும் சிந்தனையார்ந்த பரிமாற்றம் ஆகியவற்றுடன், உங்கள் பிள்ளை ஒரு வாசகராகவும் எழுத்தாளராகவும் மலர்வார்.

வாசித்தலையும் எழுதுதலையும் இல்லத்தில் ஆதரிப்பதற்கு உங்கள் பிள்ளையின் ஆசிரியருடன் பங்காளராகுவது, உங்கள் பிள்ளையின் வருங்காலத்திற்கு நீங்கள் எடுக்கக்கூடிய மிக பயன்விளைவுத் திறமுடைய தெரிவுகளாகும். University of Toronto (ரொரன்றோ பல்கலைக்கழகம்) பேராசிரியரும் எழுத்தாளருமான Jim Cummins (ஜிம் கமின்ஸ்), எமது பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கு நான்கு பிரதான வழிகளில் நாம் ஆதரவு கொடுக்கலாம் என்று கூறுகின்றார்:

1. நாம் கற்றலை சமூகம் சார்ந்ததாகவும் பரிமாற்றமுடையதாகவும் ஆக்கும்பொழுது
2. நாம் கேள்விகளை வினவும்பொழுதும் விடைகளை ஒன்றுசேர்ந்து ஆழ்ந்து ஆராயும்பொழுதும்
3. நாம் விருப்பத்தேர்வை ஊக்குவிக்கும் பொழுதும், வளர்வதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கும் பொழுதும், அவர்களின் சொந்த குரலை நிலைநாட்ட அனுமதிக்கும்பொழுதும்
4. அவர்கள் கேள்வி எழுப்பி மறையிடர்களை எதிர்கொள்ள நாம் ஊக்குவிக்கும் பொழுது (அவர்களை பாதுகாப்பாக காத்திருக்கும் வேளையில்)

**உங்கள் பிள்ளையிடமிருந்து மிகச் சிறந்ததை எதிர்பார்க்கும் வேளையில்**

1. வெற்றிகளைப் பாராட்டுங்கள்.
2. தவறுகளில் நீண்ட நேரம் செலவுசெய்யாதீர்கள்.
3. ஒரு ஆசிரியரிடமிருந்து உதவி கோரும்படி உங்கள் பிள்ளைக்கு ஊக்குமளியுங்கள்.
4. உங்கள் பிள்ளை எவ்வாறு செயற்படுகின்றார் என்பதைக் கணிப்பதற்கு அவருக்கு உதவுங்கள்.



# இணைய வளங்கள்

**TVOParents**
தங்கள் பிள்ளைகளைப் பற்றி அறிவதற்கும் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் பெற்றோருக்கு உதவுவதற்கு இத்தளம் விரிவான வீடியோக்களையும் வேறு கருவிகளையும் கொண்டுள்ள வளமாகும்.

http://tvoparents.tvo.org

**TVOKids**
இந்த இணையதளத்தில் 170 இற்கு மேற்பட்ட கற்றல்சார் விளையாட்டுகள், 4500 இற்கும் மேற்பட்ட வீடியோக்கள், மற்றும் TVOKids Homework Zone (TVOKids வீட்டுப்பயிற்சி வட்டாரம்) ஆகியவை காணப்படுகின்றன.

www.tvokids.com

**KidLit**
KidLit (கிட்லிட்) பிள்ளைகளின் ஆக்கங்களை இணையத்தில் வெளியிட்டு பிறர் அவற்றைப் பற்றி விமர்சனம் செய்ய அனுமதிக்கின்றது. அவர்களுக்கு மிகவும் பிடித்தமான புத்தகங்களின் மதிப்புரைகளையும் பிள்ளைகள் சமர்ப்பிக்கலாம்.

http://mgfx.com/kidlit/

**Be a Great Parent**
திறனான கருத்துப் பரிமாற்றம், வழிகாட்டுகை, மற்றும் தங்கள் குழந்தை அல்லது பதின்மவயதினருடன் கொண்டுள்ள உறவைக் குறித்து பெற்றோரின் கேள்விகளுக்கு விடையளிப்பதை Regional Municipality of Niagara (நையாகரா பிராந்திய நகராட்சி) இன் பிரசாரம் மையநோக்கிற் கொண்டுள்ளது. உதவிகரமான சுவரிதழ் வளங்கள் மற்றும் உண்மைத் தாள்கள்.

www.beagreatparent.ca

**Canadian Wildlife Federation**
இத்தளம் வளங்களை வழங்குவதுடன் இயற்கை வாழ்விடத் திட்டங்களை நடாத்துகின்றது. சகல வயதுடைய பிள்ளைகளுக்கும், காட்டு உயிரினங்களின் மதிப்பு மற்றும் ஆரோக்கியமான இயற்கை வாழ்விடங்களைப் பற்றி மேலதிகமாகக் கற்றுக்கொள்ள ஊக்கமூட்டுகின்றது.

www.cwf-fcf.org/en/educate/ed_resources/kids-corner/

**Canadian Geographic Kids**
கம்பளிக் காட்டு உயிரினங்கள், மாபெரும் நிலவியல், மற்றும் சுவாரசியமான உண்மைகள் மூலம் பிள்ளைகள் Canada (கனடா)வை ஆராய்ந்து பார்க்கலாம். விளையாட்டுகள், வீட்டுப்பயிற்சி உதவி, மற்றும் பலவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
www.canadiangeographic.ca/kids

***Kayak*: Canada's History Magazine for Kids**
Canada (கனடா)வின் கடந்த காலத்தின் எவர், என்ன, எது, எப்பொழுது, ஏன், மற்றும் எப்படி என்பவற்றிற்கும் அது எவ்வாறு இன்றைய நாளிற்கு தொடர்புகொண்டுள்ளது என்பதற்கும் இத்தளம் பிள்ளைகளை அறிமுகப்படுத்துகின்றது. Canada's National History Society (கனடாவின் தேசிய வரலாற்று சங்கம்) இனால் *Kayak (காயேக்)* பிரசுரிக்கப்படுகின்றது; அது 7 முதல் 11 வயது வரையுடைய பிள்ளைகளின் ஆர்வத்தைக் கவர்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

http://resource.canadashistory.ca/kayak/

**Ontario Education Resource Bank (OERB)**
எல்லா தரங்களிலுமுள்ள மாணவர்களுக்கான செயற்பாடுகளையும் வள மூலப்பொருட்களையும் இவ்விணைய நூலகம் கொண்டுள்ளது. கற்றலை வலுப்படுத்துவதற்கு, இல்லத்தில் செய்யக்கூடிய பயிற்சிகளிலும் செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்குபற்றலாம்.

www.edu.gov.on.ca/elearning/bank.html

**BBC Kids**
இவ்விளம்பரமற்ற அலைவழி பிள்ளைகளுக்கான (பாலர் பள்ளியிற்கு இன்னமும் செல்லாத பிள்ளைகள் முதல் பதின்மவயதினருக்கு) நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்றது. பெருமளவு உள்ளடக்கம் பிரித்தானிய கூட்டரசிலிருந்து வருவதாகும், ஆனால் சிறிதளவு கனேடிய உள்ளடக்கமும் காணப்படுகின்றது.

www.bbckids.ca

**Parents Matter**
தங்கள் பிள்ளைகளின் கற்றலிலும் விருத்தியிலும் கூடியளவு ஈடுபாடுகொள்ள பெற்றோருக்கு உதவுவதன் பொருட்டு, கருவிகளையும் இணைப்புகளையும் இவ்விணையதளம் கொண்டுள்ளது.

www.parentsmatter.ca/index.cfm

**Discovery Channel School**
தங்கள் சொந்த கற்றலிற்கு பொறுப்பெடுப்பதற்கு, பிள்ளைகளுக்கு பரந்தளவான இலவச வகுப்பறை வளங்களையும் கற்றல் கருவிகளையும் இத்தளம் வழங்குகின்றது. ஓய்வில்லாத ஆசிரியர்களையும் பெற்றோரையும் மனதில் வைத்து வடிவமைக்கப்பட்டது.

www.discoveryeducation.com/teachers/

# இணைய வளங்கள்

### *National Geographic Kids*

National Geographic Society (தேசிய நிலவியல் கழகம்) இன் மூலம் இச்சிறுவர் சஞ்சிகை பிரசுரிக்கப்படுகின்றது. இது 6 இற்கும் 14 இற்குமிடையான வயதுடைய பிள்ளைகளுக்கு உகந்ததாகும்.

http://kids.nationalgeographic.com/kids/

### PBS Kids

இவ் வண்ணமயமான இணையதளங்களின் சேர்க்கை, *Clifford the Big Red Dog, Teletubbies, Reading Rainbow* மற்றும் Sesame Street போன்ற அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதாகும். தங்களுக்கு மிகவும் பிடித்தமான கதாபாத்திரங்கள் அவர்களுடன் விளையாடுவதையும், ஆரம்ப வாசித்தற் உத்திகளைக் கற்பதையும் சிறுவர்கள் கண்டு மகிழ்வர்.

http://pbskids.org/

### 4Kids.org

4Kids.org ஆனது, பயிற்றுநர்கள், எழுத்தாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், மற்றும் மாணவர்களை உள்ளடக்கிய குழுமமாகும்; இணையத்தினூடான கற்றல் எவ்வாறு பாதுகாப்பான, சுவாரசியமான, மற்றும் துணிகரமானதோர் செயற்பாடாக இருக்கக்கூடியது என்பதைப் பற்றி இவர்கள் வாராந்தர கட்டுரைகளையும் இணைப்புகளையும் தயாரிக்கின்றனர்.

www.4kids.org

### Sample virtual field trips

பெரும்பாலும் வலைபடக்கருவி பெறுவழியுடன் அல்லது விளையாட்டுகள், புகைப்படங்கள், மற்றும் வீடியோக்கள் மூலமாக, உலகைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களைச் சந்தியுங்கள்.

www.theteachersguide.com/virtualtours.html

### United Nations Cyberschoolbus

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருசார்பாருக்குமான UN இன் தகவல் நிலையத்தை அணுகுங்கள்.

http://cyberschoolbus.un.org

## HOMEWORK ZONE (வீட்டுப்பயிற்சி வட்டாரம்)

TVOKids Homework Zone (TVOKids வீட்டுப்பயிற்சி வட்டாரம்) ஆனது, இலகுவாக வழிச்செலுத்தக்கூடியவொரு சூழலாகும்; இங்கு, பாடசாலையில் கற்ற கருத்துகளைப் பயிற்சிசெய்து, Ontario (ஒன்ராறியோ) பாடத்திட்டத்தின் மூன்று மையப் பகுதிகளான கணிதம், விஞ்ஞானம், மற்றும் எழுத்தறிவு ஆகியவற்றிற்கான ஆதரவை பிள்ளைகள் பெற்றுக்கொள்ள முடிகின்றது. ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட வீடியோக்கள், TVOKids நிகழ்ச்சிகள், இணைய விளையாட்டுகள், அச்சடிக்கப்படக்கூடிய பயிற்சித்தாள்கள், ஊடாடு பயிற்சிக் கருவிகள் மற்றும் கற்றல் உத்திகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. Homework Zone (வீட்டுப்பயிற்சி வட்டாரம்) ஆனது, வகுப்பறையில் எவ்வாறு கருத்துக்கள் பயிற்றுவிக்கப்படக்கூடும் என்பதையும், இல்லத்தில் நீங்கள் எவ்வாறு உங்கள் பிள்ளைகளின் கற்றலை ஆதரிக்கலாம் என்பதையும் காண்பதற்கு உங்களுக்கு வாய்ப்பளிக்கின்றது.






**Ontario Ministry of Education** (ஒன்ராறியோ கல்வி அமைச்சு)
Cette publication est disponible en français.
ISBN 978-1-4435-9379-3 (Print) ISBN 978-1-4435-9380-9 (PDF)
ISBN 978-1-4435-9381-6 (TXT) © Queen’s Printer for Ontario, 2012